5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிப்பார்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பில் நான் கீழ்க்கண்ட அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்:

''இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1972–73 ஆம் ஆண்டிற்கான சிவில் துறைகள் பற்றிய அறிக்கையின்மீதும் தமிழக அரசின் கணக்குகளின்மீதும் பொதுக் கணக்குக் குழு (1977–78) அளித்த நான்காவது அறிக்கையில் (ஆறாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின்மீதும் மற்றும் இருபதாவது அறிக்கையில் (ஏழாவது பேரவை) அளித்துள்ள பரிந்துரைகளின்மீதும் அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் நாற்பத்தொன்றாவது அறிக்கை. (கூச்சல்-குழப்பம்).

(ஆ) மதிப்பீட்டுக் குழு:

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. குப்புசாமி, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர், குழுவின் அறிக்கையினை பேரவைக்கு அளிப்பார்.

திரு. கே. குப்புசாமி : தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்:

''மாவட்ட நிர்வாகம் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய மேற்படி குழுவின் ஐந்தாவது அறிக்கை எட்டாவது சட்டமன்றப் பேரவை.'' (கூச்சல்–குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : $1\frac{1}{2}$ மணி வரையில் இப்படியே அவையை நடத்தப் போகிறேன். டி. வி. நிலையத்தாரை வரச் சொல்கிறேன். Let the T. V. people come and take photo by getting a special permission. மக்கள் இதையெல்லாம் பார்க்க வேண்டும். (கூச்சல்–குழப்பம்).

(இ) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் குழு:

மாண்புமிகு பேரவைத் தலைவர் பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கையை அக்குழுவின் தலைவர் (திரு. பொன். முத்துராமலிங்கம் அவைக்கு அளிப்பார்.

(திரு பொன். முத்துராமலிங்கம் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிக்க முன்வராத காரணத்தினால் அறிக்கை பேரவையில் வைக்கப்பட்டதாக கருதப்பெற்றது.)